# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 39வது கூட்டறிக்கை 2021.05.18

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 39வது அமர்வு 2021.05.18 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஏ.எம்.எம். நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 06. திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 07. திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 12. ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 13. ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. திருமதி.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 18. ஜனாப்.வை.பீ.எம்.முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 19. திருமதி.கே.குலமணி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| 01. ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. செல்வி.ஏ.பீ.ஏ.ஸஹானா | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:**
பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 39வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

இக் கூட்டத்திற்கு சுகயீனம் காரணமாக கலந்து கொள்ள முடியாது என்ற அறிவித்தலை கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் சபைக்கு சமர்ப்பித்து இருக்கின்றார். 03வது அலை கொவிட் இனால் இன்று நாட்டின் நிலமை மிகவும் ஆபத்தான நிலையில் இருப்பதனால் இப்படியான அமர்வுகள் நடாத்துவதற்கு விசேட அனுமதி எடுக்க வேண்டும். நமக்கு ஒரு மணித்தியாலயம் தரப்பட்டிருக்கின்றது. அந்த ஒரு மணித்தியாலயத்திற்குள் நமது நடவடிக்கைகளை முடிக்க வேண்டும். தயவு செய்து உங்கள் பாதுகாப்பிற்காக சகல கௌரவ உறுப்பினர்களும் முகக் கவசங்களை அணிந்து கொண்டே பேசுங்கள். இப்போது பரவு கிருமி காற்றிலும் பரவுவதாக பேசப்படுகின்றது.

இவ் அமர்வின் முதல் அம்சமாக சென்ற மாத கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். இதில் திருத்தங்கள் ஏதும் அனுப்புப்படவில்லை. திருத்தங்கள் இருந்தால் கூறலாம். இல்லாவிட்டால் ஒருவர் ஆமோதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |

கூட்டறிக்கை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த சூழலில் அரசாங்கம் நமது நிர்வாக நடவடிக்கைகளை எப்படியாவது கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கத்தில் சில அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்து செல்கின்றது. அதில் ஒன்று இந்த அமைச்சு மூலம் பாதைகள் திருத்துவது. உலக வங்கி திட்டத்தின் கீழ் LDSP இன் முதற்கட்ட வேலைகள் முடிவடைந்து அதன் கொடுப்பனவுகள் கிடைக்கப்பெற்று நடந்து முடிந்து விட்டது. இரண்டாவது கட்டத்தின் வேலைகள் ஆரம்பிக்கும் சாத்தியக்கூறுகள் தென்படுகின்றது. அதற்கு இடையில் அவசரமாக சில வேலைகளை கொவிட் தடுப்பு சம்மந்தமாகவும் ஏதாவது நமக்கு 02 மாதத்திற்குள் செய்யக்கூடியது அதுவும் வரவரைக்கப்பட்ட சமூகத்தை பாதுகாப்பாக வைத்திருத்தல், வசதி இல்லாதவர்களுக்கு கல்விக்கு உதவுதல், அடிப்படை வசதிகளை துப்பரவாக வைத்திருத்தல், IT சம்மந்தாமக மக்களுக்கு அறிவுறுத்தல் செய்வதற்கான வேலைத்திட்டங்களை அவசரமாக கேட்டிருக்கின்றார்கள். அதனை முன்னெடுத்துச் செல்வதற்கு எல்லோரினதும் ஆக்கபூர்வமான கருத்துகள் வேண்டும்.

எல்லை நிர்ணய குழுவினால் ஜனாதிபதியின் பணிப்பில் மாவட்டங்கள் மட்டுமல்ல பிரதேச நிர்வாக எல்லைகளுக்குள் இருக்கும் பிணக்குகளைப் பற்றி கேட்டறிவதற்காக ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. அதில் கேட்கப்பட்ட பிரச்சினைகள் நமக்கு இல்லாவிட்டாலும் மேற்குப்புற எல்லைகள் இன்னும் சரியான முறையில் தீர்க்கப்படாத முறையில் இருப்பதனால் சம்மாந்துறையின் சரித்திரத்தை ஆரம்ப காலத்தில் இருந்து விளக்கி சம்மாந்துறையின் எல்லை பேச்சுவார்த்தையின் மூலம் சம்மாந்துறை மக்களின் கருத்துக்களை உள்வாங்கி நிர்ணயிக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை நான் அந்த குழுவிற்கு அறிவித்திருக்கின்றேன். நமக்கு இருப்பது வரையறுக்கப்படாத எல்லை. அதை சம்மாந்துறை மக்களின் கருத்துகளை உள்வாங்கியே செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை நான் எழுத்து மூலம் அறிவித்திருக்கின்றேன்.

அரசாங்கம் கமசமக பிலிசந்தர என்ற திட்டம் அதாவது விவசாய கால்நடை, உட்கட்டமைப்பு, சமூக உட்கட்டமைப்பு, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக அபிவிருத்தி போன்ற துறைகளானது அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகவும் மேலும் மேற்படி திட்ட முன்மொழிவுகளை DCC Sub Committee மூலமாக தீர்மானிக்க வேண்டும் என்ற வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்கள். அதில் நாம் முன்மொழிய வேண்டிய திட்டங்கள் இருந்தால் தயவு செய்து அதை உடனடியாக அனுப்பி வைப்பீர்களானால் அதை சேர்த்து சபை சார்பாக நாம் நமது பிரதேச செயலாளருக்கு அனுப்பி வைக்கக் கூடியதாக இருக்கும். ஒவ்வொரு வட்டாரத்திலும் வெவ்வேறு பிரச்சினைகள் இருக்கலாம், தேவைகள் இருக்கலாம். அந்த தேவைகளை ஆக்கபூர்வமான முறையில் நிறைவேற்றுவதற்கு நீங்கள் அந்தப் பிரதேசத்தில் உள்ள கிராம உத்தியோகத்தர், பொருளாதார உத்தியோகத்தர், சமூர்த்தி உத்தியோகத்தர், NGO க்களின் பிரதிநிதிகள் எல்லோரையும் ஒன்று சேர்த்து மற்றவர்களும் நமக்கு ஆதரவு அளிக்கக் கூடிய முறையில் அந்த முன்மொழிவுகளை முன்வைப்பீர்களானால் வெற்றிகரமாக நமக்கு அதை செய்யக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்கலாம்.

சென்ற மாதத்தின் செலவீனங்களை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கின்றேன். அதில் ஏதாவது கேள்விகள் இருப்பின் அதனை கேட்கலாம். இல்லாவிடில் அதனை ஆமோதிக்கலாம்.

**தீர்மானம் - 04/39/01**
சென்ற மாதம் 2021.04.01 தொடக்கம் 2021.04.30 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் எம்.ரீ.பௌசுள்ளாஹ்

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/39/02**

உள்ளூராட்சி ஆணையாளரின் திணைக்கள சுற்றறிக்கை 01/2021 இற்கமைவாக ஆதன வரி, வியாபார அனுமதிப் பத்திரம் வழங்கல் தொடர்பான பணிகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவு வழங்குவதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர்

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உறுப்பினர் கோவிந்தசாமி அவர்கள் ஆளுணருக்கு எழுதிய கடிதத்திற்கு கிடைத்த பதிலுக்கு அமைவாக புதிய வாசிகசாலையின் ஆளணி நூலக உதவியாளர் இருவர், நூலக தொழிலாளி ஒருவர், காவலாளி ஒருவர் இவர்களை நியமிப்பதற்கு ஆளுணரின் அனுமதிக்காக அனுப்ப வேண்டும். அந்த அனுமதி கிடைத்த பின் உரிய முறையில் அந்த ஆளணியை நியமிக்க வேண்டும். நூலக உதவியாளர் என்று நமக்கு நியமிக்க முடியாது. சிற்றூழியர்கள் என்ற அடிப்படையில் தான் நாம் நியமனம் வழங்கலாம். ஆனால் கௌரவ ஆளுணர் அந்த அனுமதியை தருவாரானால் அதை செய்யலாம். நூலக உதவியாளர் என்ற ரீதியில் அனுமதி கிடைத்தால் ஏற்கனவே சேவையில் இருக்கும் ஊழியர்கள் தான் அதற்கு நியமனம் செய்யக்கூடிய வசதி இருக்கும். இல்லாவிட்டால் அவர்கள் நமக்கு எதிராக வழக்கு தொடரலாம். 5,6 வருடங்களாக அப் பதவியில் Acting ஆக இருப்பவர்களை விட்டுவிட்டு புதிதாக நூலகர்கள் நாம் நியமிக்க முடியாது.

தொழிலாளியாக நியமிக்கலாம். அப் பதவிகளுக்கு ஏற்கனவே அப் பதவியில் Casual ஆக இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். அதனால்தான் நமக்கு ஒரு பிரச்சினை வரலாம். அந்த நூலகத்தை துரதிஸ்டவசமாக அதற்கு முழு பண உதவியையும் செய்த கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் முன்னால் அமைச்சர் அவர்களைக் கொண்டு திறக்கக் கூடிய சூழல் இல்லை. இன்றய அரசில் அவர் பங்காளியாக இல்லாத படியினால் அதை செய்ய முடியாது. ஆனால் வாசகசாலை இயங்க வேண்டும். ஏன் இது இயங்கவில்லை என்று Audit Query உம் வந்திருக்கின்றது. அதை நாம் சபை அங்கத்தவர்கள் சேர்ந்து அதை திறந்து ஆரம்பித்து வைக்கும் ஒரு நிகழ்வை நடாத்தி மிக விரைவில் 30 ஆந் திகதிக்கு பின் செய்வதற்கு ஏற்பாடு செய்வோம்.

**தீர்மானம் - 04/39/03**

வீரமுனையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள வாசிகசாலைக்கு நூலக உதவியாளர் - 02, நூலக தொழிலாளி/சிற்றூழியர் - 01, காவலாளி – 01 போன்ற தற்காலிக ஆளணியினரை நியமிப்பதற்காக கௌரவ ஆளுணரின் அனுமதியினைப் பெறுவதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் என்.கோவிந்தசாமி

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
எமது பிரதான அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள CCTV இல் பதிவு செய்யக்கூடிய பிரமாணம் Capacity இனை பொருத்துதான். 1TB என்றால் 2, 3 நாள் History பதிவாகும். அதற்கு அப்பால் பதிவு ஆகாது. அந்த Capacity இனை கூட்ட வேண்டும். தற்போது இருக்கின்ற Capacity 03 நாளுக்குரிய பதிவை வைத்திருக்கலாம். அதை கூட்டுவதற்கு உங்களது அங்கீகாரம் வேண்டும்.

**தீர்மானம் - 04/39/04**
எமது பிரதான அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள 06 வருடங்கள் பழமைவாய்ந்த CCTV இனை Configuration and Repair செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.எஸ்.சரீபா |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பல ஆண்டுகளுக்கு பின் நமது கடயறைகளுக்கு வாடகை மீள் பரிசீலனை செய்யப்பட்டு ஏறத்தாள 02 மடங்கு கூட்டப்பட்டு இருந்தது. அந்த கடையை நடத்துபவர்கள் ஆட்சேபித்து ஒரு மனுவை தந்திருக்கின்றார்கள். சபையினால் Valuation Department செய்த மதிப்பீட்டை குறைக்க முடியாது. அது Valuation Department தான் செய்ய வேண்டும். ஒவ்வொரு 03 வருடமும் வாடகை புதுப்பிக்கப்பட வேண்டும். ஆனால் அது நீண்ட காலமாக நடைபெறவில்லை. இவர்கள் ஆட்சேபித்ததால் ஏப்ரல் மாதம் நடைமுறைப்படுத்த தீர்மானித்த புதிய வாடகைத் தொகையை தற்போதய சூழலில் வாடகைக்காரர்களின் வேண்டுகோளிற்கிணங்க புதிய வாடகை தொகைக்கும் பழைய வாடகை தொகையின் வித்தியாசத்தில் 50% இனை பழைய வாடகை தொகையோடு சேர்த்து கொவிட் காலத்தில் சலுகை வாடகையாக அறவிடுவதற்கு நாம் சிபார்சு செய்திருக்கின்றோம். அதற்கு அங்கீகாரம் எடுத்து அதை வழங்குவதற்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கின்றது.

**தீர்மானம் - 04/39/05**
எமது சபைச் சொத்தான கடையறைகளுக்கான வாடகையினை ஏப்ரல் மாதம் நடைமுறைப்படுத்த தீர்மானித்த புதிய வாடகைத் தொகையை தற்போதய சூழலில் வாடகைக்காரர்களின் வேண்டுகோளிற்கிணங்க புதிய வாடகை தொகைக்கும் பழைய வாடகை தொகையின் வித்தியாசத்தில் 50% இனை பழைய வாடகை தொகையோடு சேர்த்து கொவிட் காலத்தில் சலுகை வாடகையாக அறவிடுவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் ஐ.எல்.நஜீம் அவர்கள் ஒரு முன்மொழிவை வைத்திருந்தார். எமது சம்மாந்துறை பொது விளையாட்டு மைதானத்தினை அடையாளப்படுத்த இதுவரை பெயர்ப்பலகை அமைக்கப்படவில்லை. இதுவரை காலமாக சவக்காலை மைதானமென மக்களால் சொல்லப்படுகின்றது. 1999ம் ஆண்டு ஐப்பசி மாதம் 30ம் திகதி கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மர்ஹூம் U.L.M.முகைடீன் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. ஆகையால் அவர்களின் பெயர் பலகையை மர்ஹூம் U.L.M.முகைடீன் பொது விளையாட்டு மைதானம் என்று பெயர் இடுமாறு சபையிடம் ஆவணம் செய்யுமாறும் மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன் என்று

கூறியிருக்கின்றார். இதில் ஒரு உண்மை இருக்கின்றது. ஒரு கல் வைக்கப்பட்டு அது மறைந்ததாகவே இருக்கின்றது. சிலர் சவக்காலையாக சொல்கின்றார்கள். Official Record பொது மைதானம் என்றுதான் இருக்கின்றது. அதில் ஒரு கல் பதிக்கப்பட்டிருக்கின்றது மர்ஹூம் U.L.M.முகைடீன் அவர்கள் அதில் முதன் முதலாக ஒரு மைதானமாக இனங்காணப்பட்டு செய்வித்தது. அதனால் அதை கௌரவிக்கும் முகமாக U.L.M. முஹைடீன் பொது மைதானம் என்ற பெயர் பலகையை அமைப்பதற்கான அங்கீகாரம்.

அடுத்ததாக வீரர்கள் மற்றும் பார்வையாளர்கள் அமர்வதற்கான Bench அமைத்தல். இவ்விடத்தில் Bench , மதில் அமைத்தல் என்பது அவ்விடத்தில் ஒரு சர்ச்சையான விடயம். அதை நிச்சயமாக அதற்கு அறிவுரை கூறக்கூடியவர்களை வைத்துதான் செய்ய வேண்டும். அதில் இருக்கின்ற இடவு 2,3 அடி அதற்குள் Bench அமைத்தாலும் மதில் அமைத்தாலும் ஒரு ஆபத்து இருக்கின்றது. அதற்கு மாற்றுவழி ஒன்று தேட வேண்டும். அதை நாம் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், Sports officers எல்லோரிடமும் கலந்து ஆலோசித்து செய்ய வேண்டிய விடயம். சென்ற அமர்விலும் கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் விளையாட்டு மைதானத்தைப் பற்றி ஒரு பிரேரணை வைத்திருந்தார். அதில் இன்றுவரை உத்தியோகபூர்வமாக இந்த சபைக்கு காசு ஒதுக்கீட்டைப் பற்றி எந்த அறிவித்தலும் வரவில்லை. அப்படி வந்தால் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் அவர்களும் ஒரு ஒதுக்கீடு செய்வதாக அறிவித்தார். அது இரண்டையும் சேர்த்து நாம் அதை ஒரு ஆக்கபூர்வமான முறையில் அதை செய்வதற்கு முயற்சி எடுப்போம்.

## தீர்மானம் - 04/39/06

சம்மாந்துறை மட்டக்களப்புதரவை – 01 இல் அமைந்துள்ள பொது விளையாட்டு மைதானத்தினை அடையாளப்படுத்துவதற்காக அவ்விடத்தில் மர்ஹூம் U.L.M.முகைடீன் பொது விளையாட்டு மைதானம் என்ற பெயர்பலகையை வைப்பதற்கும், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒதுக்கீடு கிடைக்கப்பெற்ற பின் அதற்கு ஏற்ப அபிவிருத்தி வேலைகளை முன்னெடுப்பதற்குமான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.நஜீம் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல்.அஸ்பர் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இந்த சபை ஆரம்ப காலத்தில் இருந்து அரசியலுக்கு அப்பால் மக்களுக்காக நாம் ஒற்றுமையுடன் இயங்கி வந்த சபை. 1, 2 அமர்வுகளில் சில அரசியல் முரண்பாடுகளினால் நமக்குள் அந்த ஒற்றுமை கலைக்கப்பட்டது. ஆனால் நமக்கு எஞ்சி இருப்பது ஆகக் கூடினால் 09 அமர்வுகள். 48வது அமர்வு வழமையாக நடப்பதில்லை. இந்த காலகட்டத்திற்குள் இந்த சபை நாம் எந்த காரணத்திற்காக மக்களினால் இந்த சபைக்கு அங்கத்தவர்களாக தெரிவு செய்யப்பட்டோமோ அதை நோக்காகக் கொண்டு செயற்பட வேண்டும். இந்த சபையில் எல்லா கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அங்கத்தவர்கள் இருக்கின்றோம். கட்சி இல்லாமலும் அங்கத்தவர்கள் இருக்கின்றார்கள். அதை எல்லாவற்றையும் நாம் உள்வாங்கி இச் சபையில் உள்ள அரசாங்கத்தின் பங்காளிகள், அரசாங்கத்தின் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் ஊடாக செயற்படுவோம். நமது பகுதியை சேர்ந்தவர்கள் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவர் இருக்கின்றார்கள். அவர்களினதும் பங்களிப்போடு நமக்கு நமது பிரதேசத்தில் இன வேறுபாடு இல்லாமல் அரசியல் வேறுபாடுகள் இல்லாமல் நாம் சேவை செய்வோமானால் மீண்டும் ஒரு முறை மக்கள் மத்தியில் சென்று நாம் எல்லோரும் மக்களின் வாக்குகளைக் கேட்கக் கூடியவர்களாக இருப்போம். வெறுமனே அரசியல் சபைக்குள் வந்து எதிர்க்க வேண்டும் என்பதற்காக எதிர்ப்புகளை செய்து நமக்குள் கசப்பான உணர்வுகளை ஏற்படுத்துவோமானால் ஆரோக்கியமான ஒரு நிலையாக இருக்காது.

கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்கள் எனக்கு 2021.05.04 ஆந் திகதி ஒரு கடிதம் சமர்ப்பித்திருந்தார். ஜனநாயகத்திற்கு எதிரானதும், சிறப்புரிமை மறுப்புக்கான கைதியினை ஆட்சேபித்து என்ற தலைப்பின் கீழ் அரசியல் அமைப்பின் பிரகாரம் ஆட்சி, அதிகாரங்கள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். அப்போதுதான் அங்கு 100% வீதமான ஜனநாயக பண்புகளையும், சிறப்புரிமைகளையும் காண முடியும். இவ்விரு அம்சங்களும் காணப்படாவிட்டால் எமது சிறுபான்மையினருக்கான பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப்படும். அந்த வகையில் கடந்த 24.04.2021 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினரும், முன்னால் அமைச்சரும் அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தலைவருமான கௌரவ அல் - ஹாஜ் ரிஷாட் பதியுதீன் அவர்களின் கைதானது எமது நாட்டின் அரசியல் அமைப்புக்கு முற்றிலும் முரண்பட்டதும், ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமை மீறிய செயலாகவே அமைந்துள்ளது. எனவே இவரின் முறைகேடான கைதியினை ஆட்சேபித்து சபைத் தீர்மானம் ஒன்றை பதிவு செய்வதுடன், நீதியானதும், சுயாதீனமான விசாரணை ஒன்றை மேற்கொள்ள பரிந்துரை செய்ய கௌரவ உறுப்பினர்களையும், கௌரவ தவிசாளரையும் வேண்டுகின்றேன் என்று ஒரு கடிதம் அனுப்பி இருந்தார்.

இந்த சபையில் நாம் அரசுக்கு எதிராக எந்த ஒரு பிரேரணையும் நிறைவேற்ற முடியாது. நமது கருத்துகளை நாம் முன்வைக்கலாம். அதை முன்வைக்கும் போது இன்றய நாட்டின் சூழல், நாட்டின் சட்டம் நாம் இங்கு குறிப்பிடும் கைதின் பிண்ணனி இவை எல்லாவற்றையும் உள்வாங்கி நீங்கள் பக்குவமாக உங்கள் கருத்துக்களை முன்வைக்க வேண்டும் என்று கூறி, கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் அவர்கள் எனக்கு 2003ம் ஆண்டில் இருந்து அறிமுகம். ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் பாராளுமன்ற உறுப்பினராக 2001ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டு 2004ம் ஆண்டு மீண்டும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு 2005ம் ஆண்டு தனக்கு என்று ஒரு கட்சியை உருவாக்கி அன்று இருந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் அல்லது ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா அவர்களின் ஆட்சியின் பங்காளியாகி அந்தக் கட்சிக்கு என்னை தலைவராக நியமிப்பதற்கு வேண்டுகோள் விடுத்து 2005ம் ஆண்டில் இருந்து 2015ம் ஆண்டு வரை கௌரவ முன்னாள் ஜனாதிபதி இன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் கட்சியின் பங்காளியாக இருந்தவர். 2015ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் கௌரவ முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களை ஆதரித்து நல்லாட்சி அரசாங்கத்திலும் 05 வருடங்கள் அமைச்சராக இருந்தவர்.

இந்தக் காலகட்டத்தில் அவர் இந்த சமூகத்திற்காகவும், இந்தப் பகுதிக்காகவும் பல சேவைகள் செய்திருக்கின்றார். சமூகத்திற்காக அச்சம் இல்லாமல் குரல் கொடுத்திருக்கின்றார். அவர் நம்மை விட ஏறத்தாள 10 ஆண்டுகள் சக வாழ்வு செய்தது ராஜபக்ஷ குடும்பத்தின் அரசில். அவர்கள் அவரைப்பற்றி நன்கு அறிவார்கள். அப்படி இருந்தும் இன்று அவர் கைது செய்யப்பட்ட முறை எந்த ஒரு பொது வாழ்விலும் இருக்கும் மகனாலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய முறை அல்ல. கிட்டத்தட்ட 16 வருடங்கள் அமைச்சராகவும், 20 வருடங்கள் பாராளுமன்ற உறுப்பினராகவும், 12 வருடங்கள் ஒரு கட்சியின் தலைவராக புதுவாழ்க்கையில் இருந்த ஒருவரை கைது செய்து விசாரணை செய்து விடுவித்து மீண்டும் கைது செய்யப்பட்ட முறையில் எனக்கும் உடன்பாடு இல்லை. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் நீதிமன்றம் செல்லத் தேவையில்லை. கௌரவ ஜனாதிபதி அல்லது பாதுகாப்பு அமைச்சின் கட்டளையில் செயற்படுவது இந்தச் சட்டம்.

சட்டத்தை மீறும் போது சட்டம் நிலைநாட்டப்பட வேண்டும் என்றால் அதற்குரிய விதிமுறைகள் பேணப்பட வேண்டும். நாளைக்கு என்னையும் கைது செய்யலாம். கைது செய்யும் போது எதற்காக கைது செய்யப்படுகின்றேன் என்பது மக்களுக்கு தெரியாவிட்டால் அது அநியாயமாகத்தான் விளங்கும். அந்தக் கட்சியோடு பயணித்து அரசியலின் இந்த பிரதேச சபையின் பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டு தவிசாளராக இன்று இருக்கும் நான் என் தனிப்பட்ட முறையில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் அவர்களை கைது செய்த முறையை வன்மையாக கண்டித்து மக்கள் பிரதிநிதிகளுக்கு எதிராக எந்த ஒரு அரசாங்கமும் நடவடிக்கை எடுக்குமானால் மக்கள் அந்தப் பிரதிநிதிக்கு கொடுத்திருக்கும் கௌரவத்தை மதித்து செயற்பட வேண்டும் என்று எனது கருத்தை முன்வைத்து இந்தக் கடிதத்தை அனுப்பிய கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்களை அவரின் கருத்துகளை தெரவிக்குமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த 2021.04.24 ஆம் திகதி நள்ளிரவு தாண்டி அதிகாலை சுமார் 2 மணியளவில் வீட்டின் கதவுகளை உடைத்துக் கொண்டு உட்புகுந்த அரசின் விசேட உளவுத்துறையினர் புனித நோன்பு கால இரவு வணக்கங்களை முடித்துக் கொண்டு தூங்கிக் கொண்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் முன்னாள் அமைச்சர் அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தேசிய தலைவர் கௌரவ அல்ஹாஜ் ரிஷாட் பதியுதீன் அவர்களை கைது செய்ததானது உண்மையில் ஒரு கடத்தல் கொள்ளையுடன் சம்மந்தப்பட்ட போதைப்பொருள் தேசத் துரோகத்துடன் ஈடுபட்ட கொலை ஆட்கடத்தலுடன் தொடர்பான ஒருவரை கைது செய்வது போன்றே இருந்தது. ஒரு ஜனநாயக ஆட்சியின் தலைவர் 04 பாராளுமன்ற உறுப்பினர்களையும், 169 உள்ளூராட்சி உறுப்பினர்களையும் கொண்ட கட்சியின் தலைவருக்கே இந்த நிலமை என்றால் இந்த நாட்டின் ஜனநாயகம் எங்கே போயிருக்கின்றது. ஒரு பொதுமகனின் பாதுகாப்பு எவ்வாறு அமையும் என சிந்திக்க வைக்கின்றது.

கௌரவ தவிசாளர் அவர்களே, கைது செய்யப்பட்ட வேளை அவரின் முகநூலில் ஒரு காணொலியினை பதிவிட்டிருந்தார். அதில் அவர் ஏன் என்னை நீதிமன்ற பிடியாணை இல்லாது கைது செய்கின்றீர்கள்? சபாநாயகரிடம் தெரிவித்தீர்களா? நான் இன்று மாலை 05 மணி வரையும் பாராளுமன்றத்தில் இருந்தேன் என்று இவ்வாறு கூறி கேட்கின்றார். அதற்கு அந்த கைதினை மேற்கொள்ள வந்த உத்தியோகத்தர் ஒன்றுமே பேசாது இருந்துவிட்டு சில நிமிடம் கழித்து அவரிடம் Sorry Sir என்று மன்னிப்பு கோரியிருந்தார். இதில் இருந்து ஒரு உண்மை புலப்படுகின்றது இவ் உத்தியோகத்தர்கள் பணிக்கப்பட்ட வேலைகளை மட்டுமே செய்து கொண்டிருக்கின்றார்கள். மனசாட்சியின் உறுத்தலுக்காகவே அவரிடம் மன்னிப்பு கேட்கின்றனர். இக் கைதானது அரசியல் அமைப்புக்கு முற்றிலும் முரண்பட்டது. பாராளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமையை மீறுகின்ற ஜனநாயகத்திற்கு சாவு மணி அடித்து நாங்கள் வேண்டியதை செய்வோம் என அச்சுறுத்துகின்ற செயற்பாடாகவே இருக்கின்றது. ஒருவரை கைது செய்வது என்றால் நீதிமன்ற கட்டளைக்கு அமைவாக திறந்த பிடியாணை மூலமாகவே கைது செய்யப்பட வேண்டும். இதுவே அரசியல் அமைப்பு ரீதியான கைதாகும். அதிலும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை கைது செய்வது என்றால் கௌரவ சபாநாயகரின் முன் அறிவித்தலை பெற வேண்டும். இதுவே பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சிறப்புரிமையாகும்.

இச் சபையின் கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்களும் இந்த பாராளுமன்றத்தின் முன்னாள் உறுப்பினராக இருந்திருக்கின்றீர்கள். என்னை விட அதிகம் நீங்கள் நன்றாக அறிவீர்கள். இங்கு இரண்டு உரிமைகளுமே மறுக்கப்பட்டுள்ளது. பயங்கரவாத சட்டம் என்ற பெயரில் சிறுபான்மையினரை அடக்கி ஒடுக்குகின்ற இக் கொடூர சட்டத்தின் மூலமே பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார். இக் கொடூர சட்ட மூலம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை சாசனத்தின் பிரகாரம் பல விமர்சனத்திற்கும், கேள்விக்குட்படுத்தப்பட்ட சட்டம் என்பதை இங்கு நாம் எல்லோரும் நன்கு அறிவோம். கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு பயங்கரவாத குழுவுடன் தொடர்புபட்ட குளோசியஸ் நிறுவனத்திற்கு செம்புக் கம்பி விநியோகம் செய்ததாக கூறப்படுகின்றது. இச் செம்புக் கம்பி விநியோகம் ரிஷாட் பதியுதீன் என்பவராலேயோ அல்லது அன்றய அமைச்சர் ரிஷாட் பதியுதீன் அவர்களின் விருப்பத்திற்கோ வழங்கப்படவில்லை. அது முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் அவர்களின் வேண்டுகோளிற்கு அமைவாகவே வழங்கப்பட்டுள்ளது. இதற்கான சான்றுக் கடிதமும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே இங்கு கைது செய்யப்பட வேண்டியவர்கள் ஜனாதிபதியின் செயலாளரும் IDP நிறுவனத்தின் தவிசாளரும் ஆவார்.

கடந்த ஈஸ்டர் குண்டு வெடிப்பின் பின் உருவாக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவின் இறுதி அறிக்கையின் படி விசாரிக்கப்பட வேண்டியவர்கள் முன்னாள் ஜனாதிபதியும், முன்னாள் பிரதமர், அன்றய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், IDP நிறுவனத்தின் தலைவர் என குறிப்பிட்டு சொல்லி தனது இறுதி அறிக்கையினை இந்த நாட்டின் சட்டவாக்க துறையின் தலைவர் கௌரவ சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக ஊடக வாயிலாக அறிய முடிகின்றது. கௌரவ தவிசாளர் அவர்களே, பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ரிஷாட் பதியுதீன் அவர்களை இதற்கு முன்னர் ஏறத்தாள 02 மாத காலம் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்துள்ளனர். விசாரணை

முடிவில் முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் அவர்களுக்கும் பயங்கரவாத குழுவுடனோ, குளோசியஸ் நிறுவனத்துடனோ, ஏப்ரல் ஈஸ்டர் தாக்குதலுடனோ எந்தவித தொடர்பும் இல்லை என உறுதிப்படுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டதுடன் பொலிஸ்மா அதிபரினால் இப் பயங்கரவாத சம்பவங்களுடன் முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் அவர்களுக்கு எந்த தொடர்பும் இல்லை என உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் அதாவது சிறைபிடிக்கப்பட்டு விடுதலைக்கான காரணம் பற்றிய சான்றிதழ் கிடைத்துள்ளதாகவும் எங்களிடம் கூறியிருந்தார். அந்த சந்தர்ப்பத்தில் கௌரவ உறுப்பினர் மாஹிர், கௌரவ உறுப்பினர் சஹீல், கௌரவ உறுப்பினர் ஜிப்ரி உட்பட இன்னும் பலரும் இருந்தார்கள் என்பதை இங்கு சாட்சியம் கூற விரும்புகின்றேன்.

மேலும் கௌரவ தவிசாளர் அவர்களே, ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்பட்ட கல்வியாளர்கள், துறைசார் நிபுணர்கள் எங்கள் நாட்டிற்கு பெறுமதி வாய்ந்தவர்கள். நாம் அவர்களின் கருத்துக்களையும், அறிக்கைகளையும் கௌரவத்துடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்களை நாம் மதிக்காது ஏற்றுக் கொள்ளாது போவோமானால் ஆணைக்குழுக்கள் அமைப்பதன் நோக்கத்தினை நிறைவு செய்யாது போய்விடும். மக்கள் அது மீது வைத்த நம்பிக்கையினை இல்லாது செய்ய அனுமதிக்கக் கூடாது. ஆணைக்குழுவில் உள்ள கல்வியாளர்கள், துறைசார் நிபுணர்களின் கருத்துக்களை நாம் ஏற்றுக்கொள்ள மறுத்தாள் உலகில் உள்ள கல்வியாளர்கள் மத்தியில் எம் நாட்டு கல்வியாளர்கள் துறைசார் நிபுணர்கள் செல்லாக்காசாக்கப்படுவார்கள். எனவே இவ்வாறான செயற்பாடுகளை மிகவும் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டும்.

கௌரவ தவிசாளர் அவர்களே, 02 மாத காலம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரணை செய்து எந்தவித குற்றச் செயலுடனும் தொடர்பு அற்றவர் என்று ஜனாதிபதி ஆணைக்குழுவில் இறுதி அறிக்கையில் எந்த ஒரு இடத்திலாவது ரிஷாட் பதியுதீன் குற்றவாளி என குறிப்பிடப்படாதவர். மீண்டும் எப்படி இக் குற்றச் செயலுடன் தொடர்புடையவர் என இவர்களுக்கு கூற முடியும்.

கௌரவ தவிசாளர் அவர்களே, இதில் இன்னும் ஒரு அநியாயம் யாதெனில் நேற்று வரைக்கும் அவர்களிடத்தில் எந்தவிதமான விசாரணைகளும் நடத்தப்படவில்லை. இதனை அவரது சட்டத்தரணி ருஸ்தி ஹபீப் அவர்களின் ஊடாக கிடைக்கப்பெற்ற செய்தி. நான் ஏதாவது ஒரு இடத்தில் இந்த பயங்கரவாதத்துடன் சம்மந்தப்பட்டிருந்தால் அதனை நிரூபித்துவிட்டு எனக்கு அதிகூடிய தண்டனையான மரண தண்டனையை தாருங்கள் என்று உரத்த குரலில் அந்தப் பாராளுமன்றத்திலே கூறிய தலமை கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் அவர்கள். ஆகவே கௌரவ தவிசாளர் அவர்களே, இது முழுக்க முழுக்க சிறுபான்மையினரையும் அதன் துடிப்புள்ள துனிந்த யாப்பு ரீதியான பிறல்வுகள் ஏற்படுகின்ற போது அதனை எதிர்த்து நிற்கின்ற தலமையை குறி வைத்து அடக்க நினைக்கின்ற செயல் என திடமாக என்னால் கூற முடியும். இவ் அரசின் சரிவினையும், தோல்வியினையும் ஏற்க மறுத்து வெளிநாட்டு காலநிதித்துவத்திற்கு குறிப்பாக சீனாவின் காலநிதித்துவத்திற்கு கீழ் Port City யையும் மற்றும் இவ்வாறான செயல்களுக்கூடாக எமது தாய் மண்ணை கூறு போட்டு விற்கின்ற செயல்களை மக்கள் கவனத்தில் இருந்து திசை திருப்புகின்ற யுத்தியாகவே இக் கைதினை மேற்கொண்டனர்.

ஈஸ்டர் தாக்குதல் சம்மந்தமாக பேராயர் கர்தினர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் சுயமாகவும் சுயாதீனமாகவும் இத் தாக்குதல் சம்மந்தமாக முன்னாள், இன்னாள் ஆட்சியாளர்களை சாடி ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துவிட்டு மறுநாள் ஊடகங்களுக்கு ஊடாக முன்னுக்குப் பின் முரணாக மாறுபட்ட கருத்துகளை கூறியதை காண முடிகின்றது. இவ்விடயம் மிகவும் துள்ளியமாக கவனிக்கப்பட வேண்டியவை. எனவே கௌரவ தவிசாளர் அவர்களே இவைகள் அனைத்தும் இந்த இஸ்லாமிய சமூகத்தின் மீதும், இந்த சமூகத் தலைவர்கள் மீதும் அநியாயமாக சாற்றப்படுகின்ற குற்றச்சாட்டுக்கள். அதிமேதகு ஜனாதிபதி அவர்ளே நீங்கள் இந்த நாட்டின் உண்ணதமான ஜனாதிபதி புறையோடிப்போய் கிடந்த பயங்கரவாதத்தினை பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்து கொண்டு இந்த கோர யுத்தத்தினை ஒரு முடிவுக்கு கொண்டு வந்ததன் பிண்ணனியில் உள்ள ஒரு வரலாற்று சரித்திரம் படைத்த ஜனாதிபதி. உங்களது வரலாற்றினை இந்த நாட்டு மாணவர்களுக்கும், எதிர்கால சந்ததியினருக்கும் கற்றுக் கொடுக்கப்பட வேண்டிய உண்ணதமான ஜனாதிபதி நீங்கள். எனவே எங்கள் அரசியல் தலைமைத்துவங்களின் மீதும் எமது இஸ்லாமிய சமூகங்களின் மீதும் அக்கரையையும், அன்பையும் காட்டுங்கள். எங்கள் சமூகத்தில் உங்களது ஆட்சியினை மெச்சியும் வாழ்த்தியும் நாளைய சந்ததியினருக்கு சரித்திரம் கூற சந்தர்ப்பம் தாருங்கள்.

அதிமேதகு ஜனாதிபதி அவர்களே, அதிமேதகு பிரதமர் அவர்களே, உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற அதி உச்ச அதிகாரத்தினையும், அரசியல் அமைப்பின் சிறப்புக்களையும், அதி விசேட சிறப்புக்களையும் கருத்திற் கொண்டு எந்தவித அநியாயமும் செய்யாத இந்த நாட்டுக்கு எந்தவித துரோகங்களையும் செய்ய நினைக்காத எம் நாட்டு அரசினை துண்டுபோட நினைக்காத எம் நாட்டின் நிலைபேறான அபிவிருத்திக்காக வெளிநாட்டு உதவிகளை கொண்டு வந்து சேர்த்த, கொண்டு வந்து சேர்க்க நினைக்கின்ற எம் சிறுபான்மை சமூகத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் அவர்களையும் எம் சமூக அங்கத்தவர்களையும் விடுவிக்க வேண்டுவதுடன் காலங்கள் தாழ்த்தாது வரலாற்றில் வசைபாட இடம் கொடுக்காது உடன் அமுலாகும் படியான தீர்வினை பெற்றுத் தாருங்கள் என கோரி, இக் கௌரவமான உயர் சபை மூலமாக ஏகமனதான ஒரு விண்ணப்பத்தினை அதிமேதகு ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ அவர்களுக்கும், அதி மேதகு பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கும், கௌரவ சபாநாயகர் அவர்களுக்கும், பாதுகாப்பு அமைச்சர், பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர், நீதி அமைச்சர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழு, சர்வதேச பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம், சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் நிறுவனம் (IHR) இன்னும் தேவையான அமைச்சுகளுக்கும் அனுப்புமாறு கௌரவ தவிசாளர் அவர்களையும், இதற்கு பூரண ஆதரவினை கௌரவ உறுப்பினர்களிடமும் கேட்டு விடைபெறுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் அவர்கள் விரிவான ஒரு உரையை ஆற்றினார். ஏனைய உறுப்பினர்கள் உங்கள் கருத்துகளை சுருக்கமாக பேசுமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம்.சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 2021.04.24 ஆந் திகதி அதிகாலை 02 மணியளவில் புனித ரமழான் மாதத்தினுடைய சஹர் வேளையைக் கூட நிறேவேற்ற முடியாமல் எங்களுடைய அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமான கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் மற்றும் அவரது சகோதரரையும் பயங்கரவாத சட்டத்தின் கீழ் கைது செய்து 90 நாட்கள் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்யப்படுவதானது இந்த நாட்டு முஸ்லிம்களை வேதனைப்படுத்துகின்ற ஜனநாயக முறையில் ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு விடயமாக காணப்படுகின்றது. மேலும் இந் நாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை கைது செய்வதாக இருந்தால் சபாநாயகருக்கு தெரியப்படுத்தி சபாநாயகர் நீதிமன்றத்திற்கு அறிவித்த பின்னரே கைது செய்யப்பட வேண்டும் என்ற சிறப்புரிமை இருக்கின்ற போது அவற்றை மீறி சட்ட ஆட்சியையும், நீதி முறையையும் குழி தோண்டி புதைத்ததை வன்மையாக கண்டிக்கின்றேன்.

கடந்த ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் அளித்து குற்றவாளியாகக் கூட சுட்டிக்காட்டப்படாத நிலையில் மீண்டும் 02 வருடங்களுக்கு பின்னர் இவ்வாறான கைது ஜனநாயகத்தை விரும்புகின்ற அனைத்து மக்களின் மனதையும் புன்படுத்தியுள்ளது. ஆகவே சென்ற பாராளுமன்ற அமர்வில் கூட அவரை அழைத்து வருவதற்கு கூட இணங்காமல் மீண்டும் இன்றய பாராளுமன்ற அமர்வில் 03 நாட்களுக்கு இந்த அரசாங்கம் அனுமதித்து இருப்பதை இட்டு நாங்கள் சந்தோசப்படுகின்றோம். ஆனால் இவ்வாறான கைதினை எந்த ஒரு மகனும் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆகவே இந்த சபையில் ஒரு கண்டனப் பிரேரணையாக ஏற்றுக்கொண்டு உரிய இடங்களுக்கு அனுப்ப வேண்டும் என்பதனை கேட்டுக் கொண்டு விடைபெறுகின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த சம்பவம் நடைபெற்ற உடனே முதலாவது கண்டன குரல் கொடுத்தவர் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அவர்கள். இது ஒரு பிழையான முறை என்று பகிரங்கமாக பாராளுமன்றத்திலும் வசனம் தெரிவித்தார். அதை நினைக்கும் போது எனக்கு ஒன்று ஞாபகம் வருகின்றது. நாம் எப்பேர்பட்ட ஆட்களாக இருந்தாலும் எதிரியின் குழந்தை தும்மினாலும் அதை நாம் குழந்தை என்ற வகையில் ரசிப்போம். அதே போல் இங்கே நீதிபதியாக ஸ்தானத்தில் இருக்க வேண்டிய ஒருவர் தான் நமது சபையில் இருப்பவர். சட்டத்தைப்

பற்றி மிகவும் தெளிவாக் இருக்கின்றார். ஈஸ்டர் தாக்குதலின் ஊடாக ஏதோ ஒரு வகையில் தொடர்பு என்று விசாரணை செய்யப்பட்டவர்கள் கூட வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்று சட்டமா அதிபர் கூறியிருக்கின்றார். இந்த நிலையை நாம் நோக்க வேண்டும். அடுத்தது பாராளுமன்றத்தின் சிறப்புரிமை என்று சொல்லப்படுவது என்ற வகையில் கைது நேரடியாக ஜனாதிபதியின் அனுமதியைப் பெற்றுதான் அந்த CID குழுவினர் கைது செய்திருக்கின்றார்கள்.

நாட்டில் இருக்கின்ற பிரதம மந்திரிக்காக 2014ம் ஆண்டும் மேடை ஏறி பேசியவன். இந்த வருடமும் மேடை ஏறி பேசியவன். எப்பவுமே இந்த நாட்டின் பிரச்சினையை தீர்க்க வல்லமை உடைய ஒரே ஒருவர் அவராகத்தான் இருப்பார். ஏனென்றால் ஒட்டுமொத்த சிங்கள மக்களின் செல்வாக்கை பெற்றுக் கொண்ட மனிதன். அப்படியாப்பட்டவர் கொவிட் 19 இல் முஸ்லிம்கள் புதைக்கப்படுகின்றதை எதிர்த்து அடக்கம் செய்யப்படலாம் என்று அவர் பாராளுமன்றத்தில் கூறிய வார்த்தையை நடைமுறைப்படுத்த இயலாத ஒரு நிலமையில் தான் இன்றைய எமது நாட்டு நிலமை இருக்கின்றது. பாராளுமன்றம் தான் சட்டம் இயற்றுகின்ற அதி உச்ச இடம். அந்த உச்ச சபையில் ஒரு தனி நபர் ஒரு அமைச்சர் எனது உத்தரவுப்படிதான் நடந்தது என்று கூறி ஒட்டுமொத்த பாராளுமன்றத்தையும் சட்டத்தையும் உடனே பாராளுமன்றத்திலே நிராகரிக்கின்ற மாதிரி பேசினார். நிச்சயமாக அந்த விடயம் கண்டிக்கப்பட வேண்டியது. இந்த விடயத்தை பார்க்கின்ற நேரம் அதிமேதகு ஜனாதிபதி அவர்களை சிலர் பிழையாக வழிநடத்த முற்படுகின்றார்கள் என்றுதான் எனக்கு விளங்குகின்றது. அந்த சட்டமூலம் பாராளுமன்றத்திலே அவர் நினைத்த மாதிரி பாதுகாப்பிற்கு நான் பதில் சொல்ல வேண்டும். கைது செய்யப்படத்தான் வேண்டும் என்று ஆணவத்தோடு சட்டத்தை தன் கையில் ஒரு அமைச்சர் எடுப்பது ஒரு நாட்டின் சட்டம் இயற்றுகின்ற இடத்திற்கே பிழையாக கருத முடிகின்றது. இதுதான் நாம் முக்கியமாக உணர வேண்டிய விடயம். அப்படிப்பட்ட பாராளுமன்ற உறுப்பினருக்கே இந்த நிலமை என்றால் ஏனையவர்களுக்கு என்ன என்பது கேள்வி. அதை மிகவும் தெளிவாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்கள் கண்டனத்தோடு தெரிவித்திருக்கின்றார்.

பாராளுமன்றத்திற்குள் இருக்கின்ற அரசாங்க ஆளும் தரப்பு உறுப்பினர்களுக்கு கூடவே இது பிடிக்கவில்லை. பாராளுமன்றத்தில் இந்த ஆட்சிக்கு மிக முக்கியமாக இருந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் கூட இதில் பெரிய ஒரு அதிதிருப்தியாகத்தான் இருக்கின்றது. நான் நினைக்கின்றேன் பாராளுமன்றத்திற்கு வெளியே இந்த நாட்டிலே ஒரு கட்சியை குறிப்பிட்ட காலத்திற்குள் உருவாக்கி பலம் வாய்ந்த அரசாங்கம் இருக்கின்ற நேரம் மாற்றுக் கட்சியால் உள்ளுராட்சி சபைகளை நிறுவி ஜனாதிபதியை உருவாக்கி அடுத்தாக பிரதமரையும் கொண்டு வந்த கௌரவ பஷில் ராஜபக்ஷ அவர்கள் பெரிய பதவியில் இருக்கின்ற அவருக்கு கூட இதில் நல்ல உள் விருப்பம் இல்லை என்பதை உள்வாரியாக அறிகின்றேன். நாங்கள் இந்த சபையில் இருப்பவர்கள் அனேகமாக முஸ்லிம் காங்கிரசும் அடுத்தது SLFP உம், அகில இங்கை மக்கள் காங்கிரசும்தான். எனவே எங்களுக்குள் இந்த சபையை பொருத்தவரையில் ஒரு பிழையான தீர்மானம் என்பதை ஏகமனதாக எடுப்பதில் மாற்றுக் கருத்துக்கு இடம் இருக்க மாட்டாது என்று நினைக்கின்றேன். முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் முழுமையாக கண்டித்து இருக்கிறார். ஏனைய உறுப்பினர்கள் அகில இலங்கை மக்கள் காங்கிரசின் ஊடாக வந்திருக்கின்றார்கள். நாங்கள் உண்மையாக அரசாங்கத்திற்கு ஆதரவானவர்கள். இருந்தாலும் பிழைகளை சுட்டிக் காட்டாத குற்றத்திற்கு ஆளாகுவோம் என்ற ஒரு காரணத்திற்காக இந்தப் பிழையை சுட்டிக் காட்டத்தான் வேண்டும்.

கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்கள் ஒரு ஆசிரியர். ஏற்கனவே இந்த சபையிலே ஆசிரியர் என்றால் யார் என்று பிரித்து காட்டி இருக்கின்றேன். ஆசு குற்றம் இரியர் களைதல் குற்றம் களைதல் என்பதே ஆசிரியர். ஆசிரியர் வழிகாட்டுபவர். ஆனால் நீங்கள் 60 வயதிற்கு பிறகு எங்கள் சபையில் இருக்கின்றீர்கள். சபையை பொருத்தவரையில் நீங்கள் ஒரு குரு. கு என்றால் இருள் ரு என்றால் அகற்றுதல். நீங்கள் ஒரு குருவாக இருந்து இந்த சபையை வழிநடத்த வேண்டும். குரு என்று சொல்பவர் வாழ்ந்து காட்டுபவன். ஆசிரியர் வழிகாட்டுபவன், ஆட்சாரியன் தன்னை விட மேலானவர்களை உருவாக்குபவன். எனவே நீங்கள் குரு என்ற அடிப்படையில் தான் இந்த சபையில் இயங்க வேண்டும். எனவே நீதமாக நாங்கள் நடந்து கொள்ள வேண்டும். எங்களது அரசாங்கமும் எங்களுக்கு உதவ வேண்டும். நாங்கள் எங்கள் அரசாங்கத்திற்கு முஸ்லிம்கள் செய்த விடயங்களை எடுத்துரைக்க வேண்டும். பாராளுமன்றத்தில் தகுதிவாய்ந்தவர்கள் இருக்கின்றார்கள். அவர்களும்

முஸ்லிம்கள் இந்த நாட்டிற்கு செய்த முழு ஒத்துழைப்பையும் சொல்ல வேண்டும். அது மறைக்கப்படுகின்றது. இன்றைக்கு தமிழ் நாட்டை எடுத்துக் கொண்டால் வைக்கோ இஸ்லாத்தைப் பற்றி பேசி தமிழ் மக்களுக்கு புரிய வைத்திருக்கின்றார். சீமான் என்பவர் இஸ்லாத்தைப் பற்றி பேசி தமிழ் மக்களுக்கு புரிய வைத்திருக்கின்றார். இன்றைக்கு சிங்கள மக்களின் நிலமை எம்மை வெறுப்பாகப் பார்க்கின்ற அளவுக்கு சில தீய சக்திகள் திட்டமிட்டு நம்மையும் சிங்கள மக்களையும் பிரிக்கின்றார்கள். அரசாங்கத்தில் உண்மையாக Election கேட்காமல் நீதியமைச்சுப் பதவியை அலி சப்ரி அவர்களுக்கு கொடுத்திருக்கின்றது. மர்ஜான் பழீல் அவர்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவியை கொடுத்திருக்கின்றது. மர்ஜான் பழீல் அவர்கள் ஒரு அமைச்சரை விட அதிகாரம் பொருந்தியவர். கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்களுக்கு தெரியும். அப்படி இருக்கும் போது பல விடயங்களை செய்கின்றார்கள். ஆனால் பலர் ஒற்றுமை ஏற்படாமல் பிரிக்கின்றார்கள்.

பிரிக்கின்ற சக்திகளை இனங்கண்டு முஸ்லிம்கள் இந்த நாட்டிற்கு செய்த வரலாறு இருக்கின்றது, சரித்திரம் இருக்கின்றது. நாங்கள் கொடுத்த பூமிகள், பண உதவிகள், நிதி உதவிகள், அரசியலில் UNP என்ற பெரும் கட்சியை உருவாக்க உதவியவர்கள். SLFP கட்சியை உருவாக்க உதவியவர்கள், பாடுபட்டவர்கள். நாங்கள் செய்த நன்மைகளை மறுக்கடிக்கப்பட்டு இன்றைக்கு நாங்கள் யாருமே ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகம் அங்கீகரிக்கப்படாத ஜிகாத் என்ற போர்வையில் நடத்தைப் புரள்வான ஒருவர் செய்த வேலையை உண்மையாக அதன் பிண்ணனி என்ன என்று சொன்னால் இலங்கையிலே ஒரே நேரத்தில் 7,8 இடங்களில் குண்டு வெடித்தது. அரசாங்கத்தின் பக்கம் இருந்து பார்க்க வேண்டிய விடயம். ஒரே நேரத்தில் இப்படியான குண்டுகள் வெடிக்கவில்லை. ஆகையினால் சமூகங்கள் பயங்கரமாக பார்க்கின்றார்கள். எனவே அதையும் உள்வாங்கியவர்களாக நாங்கள் ஒவ்வொருவரும் சிறுபான்மையினர்கள். எங்களது ஒற்றுமைகள் குழையாமல் எங்களது எதிர்காலத்தில் நாம் ஒரு நிமிடத்தில் பேசுகின்ற பேச்சு பல வருடங்கள் பிழையாக பேசிவிட்டால் பல வருடங்கள் அது தாக்கத்திற்கு கொண்டு செல்லும். எனவே என்னால் அறிந்தமட்டில் இந்த சபையை பொருத்தவரையில் நாங்கள் ஏகமனதாக இது ஒரு பிழையான தீர்மானம் என்பதை அரசாங்கத்திற்கு எடுத்துக்காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்கள் என் பாராளுமன்ற வாழ்க்கையைப் பற்றி பேசியதால் அதற்கு ஒரு விளக்கம் கொடுக்க வேண்டும். இந்த பயங்கரவாத தடுப்புச் சட்டம் ஒரு யுத்த சூழலில் உருவாக்கப்பட்ட சட்டம். அந்த சட்டம் உருவாக்கப்பட்டதோ எந்த விடயத்திலும் உடனடியாக சட்டத்தை வளைத்து உடனடியாக அதிகாரத்தில் இருக்கும் பாதுகாப்பு அமைச்சருக்கு சில நடவடிக்கைகள் எடுப்பதற்காக உருவாக்கப்பட்ட சட்டம் தான் Prevention of Terrorism Act இதை பல தரப்புகள் பல ஆண்டு வருடங்களாக எதிர்த்து வருகின்றார்கள். சர்வதேச மட்டத்தில் எல்லோரும் எதிர்த்து அதை நியாயப்படுத்திக் கொண்டு வந்து இந்த நல்லாட்சி அரசாங்கம் 2015ம் ஆண்டய ஜனாதிபதி தேர்தலில் அதை ஒரு பேசு பொருளாக எடுத்து நிச்சயமாக நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இந்த சட்டத்தை மாற்றுவோம் என்று மக்களுக்கு உறுதிமொழி கொடுத்தும் 05 வருட காலங்களுக்குள் அதை ஒரு மசோதாவாக பாராளுமன்றத்திற்கு கொண்டு வர முடியாத ஒரு சூழல் வந்ததுதான் யதார்த்தம். ஏனென்றால் பெரும்பான்மை மத்தியில் அச்சம் இருக்கும் வரை பெரும்பான்மை ஆதரவு இல்லாமல் எந்த சட்டத்தையும் மாற்ற முடியாது என்பது யதார்த்தம்.

இன்று குறை கூறுபவர்கள் கூட அந்த சட்டத்தை வைத்து இயங்கியவர்கள். பாராளுமன்றத்தில் இருக்கின்ற பிரச்சினை என்னவென்றால் PTA Act எந்த சட்டத்தையும் மதிக்காது அது ஒரு யுத்த சூழலில் உருவாக்கப்பட்ட அந்த காலத்திற்கு தேவையான ஒரு சட்டம். ஆனால் அதை இன்னும் பாராளுமன்றத்தில் சட்டத்தை இயக்கும் சபையில் மாற்றக்கூடிய சூழல் சென்ற அரசிலும் இருக்கவில்லை, அதற்கு முந்திய அரசிலும் இருக்கவில்லை, இந்த அரசிலும் அந்த எண்ணமோ இல்லை. அந்த ஒரு சட்டத்திற்குள் நடக்கும் விடயங்கள் நான் ஆரம்பத்திலே சொன்னது இந்த கைது செய்யப்பட்ட முறை ஒரு மக்கள் பிரதிநிதிக்கு உகந்தது அல்ல. அதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. அதை ஆட்சேபிப்பதில், கருத்து சொல்வதில் எல்லோருக்கும் ஜனநாயக உரிமை இருக்கின்றது. ஆனால் நான் ஆரம்பத்திலும் எச்சரித்தது சபைகளில் அதுவும் பதிவு செய்யப்படும் இடங்களில் பேசும் போது நம்மிடம் ஆதாரம் இல்லாமல் எதையும் பேசுவது நமக்கு ஆபத்தானது.

இன்று கௌரவ முன்னாள் அமைச்சர் இன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எந்தக் காரணத்திற்காக கைது செய்யப்பட்டார் என்று உத்தியோகபூர்வ அறிக்கை எதுவும் இல்லை. அப்படியான ஒரு நிலையில் நீங்கள் அதற்கு வித்தியாசமான கருத்துகளை கூறாதீர்கள். அது உங்களுக்கு ஆபத்தானது. அதை உள்வாங்கி பேசுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம்.ஜிப்ரி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எந்தவிதமான வெறுப்பு, கசப்புகள் இருந்தாலும் இந்த சபையினால் தலைவருக்காக ஏகமனதாக ஒரு தீர்மானத்திற்கு வருவோம்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் அவருடைய கைது முறைகேடானது என்றுதான் இவ்விடத்தில் கூற வேண்டும். ஆனால் அவர் முஸ்லிமாக இருந்தாலும் மாற்று இனம் கூட அவருடைய கைதுக்கு முரண்பாடு இல்லை. ஆகவே நாங்களும் இந்த கைது சம்மந்தமாக கண்டனத்தை தெரிவிக்க வேண்டும் என்று கூறி விடைபெறுகின்றேன். அவருக்கு எங்களது துஆவும் பிரார்த்தனையும் போகட்டும்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தவிசாளர் அவர்கள் கூறியது போன்று முன்னாள் கௌரவ அமைச்சரின் கைதிற்கான காரணங்கள் என்ன என்று தெரியாத நிலையில் நாம் அவசரப்பட்டு எங்களுடைய ஊரின் ஊடாக கண்டனம் தெரிவிப்பது பிழை என்று நினைக்கின்றேன். ஏதோ அரசாங்கத்திற்கு எதிராக நாம் கண்டனம் தெரிவிக்கின்ற போது சில நேரங்களில் எங்களுக்குரிய ஆபத்தான விடயங்கள் ஏற்படக்கூடும் என்பதையும் நான் மறைமுகமாக பேசிக் கொள்ள ஆசைப்படுகின்றேன். எனவே எங்களுடைய கௌரவ தவிசாளர் அவர்கள் கூறியது போன்று எங்களுக்கு எதற்காக கைது செய்யப்பட்டார் என்று அது அல்லாஹ்வுக்குதான் தெரியும். இதற்கு நாம் பரிதாபப்படலாம், நியாயங்களை பேசிக் கொள்ளலாம். அரசாங்கத்திற்கு எதிராக கண்டனம் தெரிவிக்கின்ற விடயத்தில் எல்லோரும் சிந்தித்து செயற்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எல்லோருடைய உரையையும் உள்வாங்கியவளாக, ஒரு முஸ்லிம் இனம் என்ற அடிப்படையில் அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தலைவரும் முன்னாள் அமைச்சரும் இன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் அவர்களின் கைது சம்மந்தமாக, அவர் கைது செய்யப்பட்ட முறை தவறானது என்று நாம் கூறுவது ஒரு பக்கம் இருக்க மறுபக்கம் அந்த கைதில் இரு அம்புலங்கள் நுழைந்து மறைந்திருக்கலாம். ஒன்று அவர் மக்கள் பிரதிநிதி பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் மக்களால் கூடுதலான பெரும்பான்மையான இன மக்களால் ஒரு எதிரியாகவோ அல்லது விமர்சிக்கப்பட்டோ இருந்து வருவதனால் அவர் அதற்கு ஒரு எதிரியான ஒரு உயிர் பாதுகாப்பிற்காக உயிர் பாதுகாப்பற்ற முறையில் ஏதாவது நடந்து விடுமோ என்பதற்காக அரசாங்கம் கைது செய்யப்பட்டிருக்கலாம். கைது என்பது அடிக்கடி இவரை அவருடைய ஒவ்வொரு வாக்குமூலத்திற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு அழைத்து இவரை இழிவாக பயன்படுத்தாமல் நாம் இவரை கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் இவரை ஒரு இடத்தில் வைத்து நாங்கள் விசாரணை மறைமுகமாக செய்யலாம் என்றும் கைது செய்திருக்கலாம்.

எங்கள் அவசர திட்டத்தினாலும் நாங்கள் எடுக்கும் கண்டனப் பிரேரணையினாலும் கை சேதமே ஒழிய எங்களுக்கு எந்த நல் விளைவும் வராது. நாங்கள் எதிரியோடு ஒத்துழைத்து போனால் தான் எதையும் வெல்லலாம். ஆனால் இன்றய காலகட்டத்தில் இக் கைது சம்மந்தமாக எத்தனையோ அறிக்கைகள் வெளியிடப்படும் எல்லா நாடுகளில் இருந்து அறிக்கைகள் வெளியிடப்பட்டும் எதற்காக கைது செய்யப்பட்டது என்று அந்த கைதின் ஒரு அறிக்கை வெளியிடப்படவில்லை என்றால் அது எங்களது தலைவரின் நலவுக்காகவும் இருக்கலாம். நாம் ஒரு பக்கம் சிந்தித்து கண்டனப் பிரேரணை தெரிவத்தால் வெந்த புண்ணில் வேலை பாய்ச்சுவது போல் இல்லாமல் பொறுமையாக இருந்து இதற்கான துஆ பிரார்த்தனை செய்து அரசாங்கம் அவருக்கு ஒரு நலவை எதிர்பார்த்து வைத்திருக்கலாம்.

ஆகவே கண்டனப் பிரேரணை என்பதை தவிர்த்து நாங்கள் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம் என்று இச் சபையில் ஒரு தீர்மானத்தை எடுத்து இவர் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று இந்த சபை சார்பாக சகலரும் துஆ பிரார்த்தனை செய்து எங்களது கௌரவ தவிசாளர் சொன்னது போன்று நாங்கள் ஒருவரை சாட்டாமல் அரசாங்கத்தின் மீது பழிகளை சுமத்தாமல் பெரும்பான்மை இனத்தை கொண்ட ஜனாதிபதி ஜனநாயக ரீதியில் மக்களுக்கு கட்டுப்பட்டுதான் ஆக வேண்டும். அந்த அடக்க ஒடுக்கம் என்ற ரீதியில் ஒரு ஜனாதிபதி மக்கள் எல்லோரையும் ஒரு மதத்தின் கீழ் வாழ வைக்க வேண்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார். சில இன்னல்களுக்கும், இடிபாடுகளுக்கும் முகங்கொடுக்க இயலாமல் அவர்களுக்கு பதில் சொல்ல இயலாமல் இன்றய காலகட்டத்தில் சூழ்நிலையை பொறுத்து நடந்து கொண்டிருக்கின்ற வேளையில் நாங்கள் எந்தவித கண்டனப் பிரேரணையும் இந்த ஊரிலோ அல்லது வேறு எங்கயுமோ விடுப்பதை தவிர்த்துக் கொள்வது நல்லது என்பது எனது கருத்து.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஒட்டுமொத்தமாக நாம் எடுப்பது எதிர்ப்பு அல்ல. ஒரு கருணை மனுவாவது அனுப்ப வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
முன்பு கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் கொண்டு வந்த பிரேரணை ஜனாசாக்கள் எதிர்ப்பு விடயத்தில் எப்படி கையாண்டோமோ அதே மாதிரி கௌரவ உறுப்பினர் சட்டத்தரணி அவரோடு கலந்தாலோசித்து உங்கள் கருத்துகளை உள்வாங்கி ஒரு மக்கள் பிரதிநிதி கட்சியின் தலைவர் கைது செய்யப்பட்ட முறையை இந்த சபை மக்கள் பிரதிநிதியாக அமைந்த சபை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது எனவும், எதிர்காலங்களில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் மக்கள் பிரதிநிதிகள் கைதாகும் போது உரிய காரணங்கள் வெளிப்படுத்தப்பட்டு மக்களின் பிரதிநிதிகள் என்ற அந்தஸ்த்திற்கு பங்கம் விளைவிக்காமல் மக்களின் ஜனநாயக அடிப்படை உரிமைகளை மதித்து நடாத்தப்பட வேண்டும் என்று இந்த சபை தீர்மானித்தது என்ற அறிவித்தலை நாம் ஜனாதிபதிக்கும், பிரதமர் அவர்களுக்கும், சபாநாயகர் அவர்களுக்கும் அறிவிப்பதற்கு உங்கள் அனுமதியினை கோரி இந்த சபையின் அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

**தீர்மானம் - 04/39/07**
மக்கள் பிரதிநிதி கட்சியின் தலைவர் கௌரவ முன்னாள் அமைச்சரும் இன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் அவர்கள் கைது செய்யப்பட்ட முறையை மக்கள் பிரதிநிதியாக அமைந்த இந்த சபை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது எனவும், எதிர்காலங்களில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் மக்கள் பிரதிநிதிகள் கைதாகும் போது உரிய காரணங்கள் வெளிப்படுத்தப்பட்டு மக்களின் பிரதிநிதிகள் என்ற அந்தஸ்த்திற்கு பங்கம் விளைவிக்காமல் மக்களின் ஜனநாயக அடிப்படை உரிமைகளை மதித்து நடாத்தப்பட வேண்டும் என்றும் அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கும், கௌரவ பிரதமர் அவர்களுக்கும், கௌரவ சபாநாயகர் அவர்களுக்கும் அனுப்புவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

A.M.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை